# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 87/2020 தேதி- 07.03.2026
(DW.2) – செல்லையப்யன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1. நான் எந்த கட்சியில் பொறுப்பில் இருக்கிறேன் என்றால் நான் அ.தி.மு.க கட்சியில் உறுப்பினராக உள்ளேன். நான் மேற்சொன்ன கட்சியில் 20 ஆண்டு காலமாக இருந்து மக்களுக்கு பல நலத்திட்டங்கள் செய்து கொடுத்து வருகிறேன் என்றால் இல்லை. ஆகத்து அம்மாள் மற்றும் மல்லிகா ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.449/2009 என்ற வழக்கில் மல்லிகா என்பவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. மேற்சொன்ன வழக்கில் நான் 2 வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நினைவில் இல்லை.

2.என்னை ஊரில் செல்வம் என்ற பெயரில் அழைப்பார்கள் என்றால் சரிதான். 25.11.2007, 14.11.2017 மற்றும் 17.02.2019 ஆகிய தேதிகளில் இந்த வழக்கின் வாதியின் தாயாரான ராஜம் என்பவர் தக்கலை காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் அளித்திருந்தார் என்றால் நினைவில் இல்லை. ஊரில் உள்ள பல நபர்கள் என் மீது பல புகார்கள் தக்கலை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் பொய் புகார்களாகும். நீதிமன்றத்தில் பல நபர்களுக்கு ஆதரவாகவும் பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை.

3.வாதிக்கு வழக்கு பட்டிகை சொத்து எவ்வளவு விஸ்தீரணம் உரிமைப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள B பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 அடி வீதி ஆகும். B பட்டிகை சொத்தில் எவ்வளவு சென்ட் நிலம் உள்ளது என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தான A, B, C பட்டிகை சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று உண்மையிலேயே தெரியாது என்பதால் தான் எவ்வளவு விஸ்தீரணம் என்றும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

4.நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் வழக்கின் பிரதிவாதி ஐந்து நபர்களுக்கு பாதை அவகாசம் ஆவணமாக எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், அதில் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன ஐந்து நபர்களுக்கு எவ்வளவு விஸ்தீரணம் எழுதிக் கொடுத்தார் என்றால் தெரியாது. C பட்டிகை சொத்து வழிப்பாதையாக உள்ளதால் ஊர் மக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. C பட்டிகை சொத்தில் உள்ள முள்வேலி அமைக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன், அந்த முள்வேலியின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு என்றால் அளவு குறிப்பிட்டு சொல்ல முடியாது.

5.C பட்டிகை சொத்தை நான் பார்த்து இருந்ததால் என்னால் அளவுகள் சொல்ல முடிந்திருக்கும் என்றால் சரியல்ல, என் வீடு அங்கு தான் உள்ளது. A பட்டிகை சொத்தியிலிருந்து B பட்டிகை சொத்திற்கு சென்றுவர ஒரு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. B பட்டிகை சொத்து புறம்போக்கு என்று சொல்லியுள்ள நிலையில், அதை ஆக்கிரமித்து குறித்து புகார்கள் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

6.உண்மையிலேயே B பட்டிகை சொத்து வாதியின் பட்டா சொத்து என்பதால் தான் புகார் மனு எதுவும் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. B பட்டிகை சொத்தின் தென் பகுதியில் ஒரு மதகு உள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல, விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார்கள். B பட்டிகை சொத்தில் உள்ள கால்வாய் விவசாய நிலத்திற்கு சென்று வருகிறதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

7. மதகு வழியாக பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விதை மற்றும் பயிர்நாற்றுகளையும் கொண்டு சென்று வந்தனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் ஓடை வழியாக கொண்டு செல்வார்கள். வாதிகள் ஒரு செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலமாக கால்வாயை ஆக்கிரமித்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் வீட்டில் உள்ள கழிவுநீர் கால்வாயில் கலந்து மாசு ஏற்படுத்துவதாக

நான் சொல்லியுள்ள நிலையில், நானோ, பிரதிவாதியோ சம்மந்தப்பட்ட துறைக்கு எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

8.பிரதிவாதிகள் சொல்லாத சங்கதிகளை மீறி கற்பனையாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் மேற்சொன்ன கால்வாயை ஆக்கிரமிக்க முயற்சி செய்த போது அதை பிரதிவாதி தடுத்ததன் பேரில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. C பட்டிகை சொத்தின் வழியாக வாதிகள் பயன்படுத்தி வந்தார்கள் என்றாலும், அதை பிரதிவாதிகள் தடுத்த போது தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, C பட்டிகை சொத்து வழிபாதை இல்லை.

9.வாதிகள் காவல் துறையில் பணியாற்றி வருவதால் அதன் ஆதிக்கத்தின் அடிப்படையில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளோ மற்ற அரசு அதிகாரிகளோ எவ்விதத்திலும் அரசுக்கு உரிமைப்பட்ட புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிக்க முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் தங்களை தட்டிக் கேட்கும் பொது மக்கள் மீது புகார் கொடுத்ததாக நான் எந்த முகாந்திரமும் இல்லாம் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் நான் தான் சொல்லிக் கொடுத்தேன்.

10. ஏற்கெனவே வாதிகளிடம் பிரச்சனை செய்தது சம்மந்தமாக வாதிகள் கொடுத்த புகாரின் காழ்ப்புணர்ச்சி காரணமாக வாதிக்கு எதிராக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல,